யிலே மத்திய அரசு உருக்குக் கம்பிகளை நமக்குக் கொடுக்கமுடியாவிட்டால் நாம் அவைகளை வெளி நாடுகளிலிருந்தாவது இறக்குமதி செய்துகொள்ள மத்திய அரசை வற்புறுத்தி, அந்த உரிமையைப் பெற இந்த அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இரும்புக் கனிப் பொருள்கள் ஏராளமாக இந்த நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகிறது. நம்முடைய நாட்டில் இரும்புப் பொருள்கள் கிடைக்கவில்லை. இறக்குமதி, ஏற்றுமதிக் கொள்கை மத்திய அரசில் பொறுப்பில் இருப்பதால், இதுபற்றித் தெளிவான கொள்கையை வகுக்க வேண்டும் என்று நம்முடைய மாநில அரசின் சார்பிலே மத்திய அரசிடம் அண்மையில் வற்புறுத்தப்பட்டிருக்கிறது. குறிப்பாக கனம் அங்கத்தினர் சுட்டிக்காட்டியது போல நம்முடைய மின்சாரத் துறைக்கு வேண்டிய பொருள்களைக்கூட அவர்களால் தரமுடியவில்லை. அதுபற்றி சம்பந்தப்பட்ட அமைச்சரைக் கேட்டபொழுது, மின்சாரத் துறைக்கு உடனடியாகக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால், இதுவரையில் நாம் கேட்கக்கூடிய அளவில் பெரும் பகுதி கொடுக்கப்படவில்லை என்று அவர்களுக்கு எழுதியிருக்கிறோம். சமீபத்தில் அவர்கள் எழுதிய பதிலில், பிரையாரிடியில், டாப் பிரையாரிடி கொடுக்கச் சொல்லியிருக்கிறோம் என்று எழுதியிருக்கிறார்கள். ஆனால், இதுவரைக்கும் நாம் கேட்ட அளவுக்குக் கிடைக்கவில்லை. அதனால் மின்சார இலாகாவினுடைய வேலை தடைபடும் என்ற அச்சத்தையும் மத்திய அரசுக்குத் தெரிவித்திருக்கிறோம்.

Iron and Steel Advisory Council.

* 440 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Industries be pleased to state whether the Government of Tamil Nadu and the trade representatives from this State have been represented on the reconstituted Standing Committee of the Iron and Steel Advisory Council set up by the Union Government?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : இந்த அட்வைசரிக் கமிட்டியில் நமக்கு ஏன் பிரதிநிதித்துவம் அளிக்கப்படவில்லை? இந்த பிரதிநிதித்துவத்தைப் பெறுவதற்கு அரசாங்கம் வற்புறுத்துமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாநிலத் தேவைகளை எடுத்துச் சொல்வதற்கு மாநில அரசின் சார்பில் அதில் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட வேண்டும் என்ற கருத்தை மத்திய அரசிடம் தெரிவித்தோம். அவர்கள் அதற்குத் தெரிவித்த பதில் ஒவ்வொரு மாநிலத்திற்கும் பிரதிநிதித்துவம் இடையாது, பொதுவாக இது சம்பந்தப்பட்டவர்களுக்கு இதில் பிரதிநிதித்துவம் கொடுக்கிறோம் என்று சொன்னார்கள். மீண்டும் மாநில அரசுக்கும் இதில் பிரதிநிதித்துவம் வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தியிருக்கிறோம்.

THIRU K. VINAYAKAM : Sir, whereas our State does not produce any steel worth the name, whereas the demands of both the public sector and the private sector are increasing day by day, whereas the Government are incapable of giving an assessment of the total requirements of our State and whereas we are always at the mercy of the Central Government as far as the steel quota

is concerned, why not this Government press the Central Government to take in our representatives in the Steel Advisory Council especially when we are not producing steel?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நம்முடைய மாநிலத்தினுடைய தேவையின் மொத்த அளவு எவ்வளவு என்று சொல்வதற்கு அரசாங்கத்தினுல் முடியாது என்று சொன்னுர்கள். 'இன்கேபபிள்' என்று சொன்னுர்கள். அது சம்பந்தமாக கேள்வி கேட்டு பதில் தெரிந்து கொண்டதற்குப் பின்னுல், அவர்கள் அப்படி சொல்லியிருந்தால் அவருடைய திறமையைப் போற்றியிருக்கலாம். கேள்வி கேட்பதற்கு முன்னுல், அந்தத் தகவல் என்னிடம் இல்லை என்று சொன்னதற்குப் பின்னுலே 'இன்கேபபிள்' என்று சொல்வது கனம் அங்கத்தினர் அவர்களுக்கு பொருத்தமுடையதாக இருக்காது நம்முடைய மாநிலத்தில் இரும்புப் பொருள்களின் தேவை அதிகமாக மிகுந்துவருகிறது என்ற கருத்தை அவர்கள் சொன்னதுபற்றிப் பாராட்டுகிறேன். அந்த அளவுக்கு நாட்டில் தொழில் வளர்ச்சி பெருகி வருகிறது என்பதை அவர்கள் மறைமுகமாக ஒத்துக்கொண்டிருக்கிறுர்கள். மாநில அரசின் சார்பிலே இந்தக் குழுவில் அங்கம் வகிக்கவேண்டும் என்று மத்திய அரசிடம் வற்புறுத்தவேண்டும் என்று சொன்னுர்கள். ஏற்கனவே நான் அப்படி வற்புறுத்திவருவதாகச் சொன்ன பதிலைக்கூட கேட்காமல் அவர்கள் கேள்வி கேட்டுவிட்டார்கள் என்று வருந்துகிறேன்.

நாசரேத் கூட்டுறவு நூற்பாலையில் தீ விபத்து

*441 வினு.—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாசரேத் கூட்டுறவு நூற்பு ஆலையில் 1969-ம் ஆண்டு, ஆகஸ்ட் இரண்டாவது வாரத்தில் தீ விபத்து ஏற்பட்டதா ?

(இ) ஆம் எனின், விபத்தால் ஏற்பட்ட இழப்பு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) விபத்தால் ஏற்பட்ட இழப்பு பின் வருமாறு :

பஞ்சு அழிவினுல் இழப்பு சுமார் ரூ. 78,000.

கட்டடம் மற்றும் இதர அழிவினுல் இழப்பு சுமார் ரூ 29,000.

முற்பகல் 9-30 திரு. எஸ். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, இந்த தீ விபத்துக்குக் காரணம் என்ன? இந்த இழப்பு முழுவதற்கும் இன்ஷூரன்ஸ் கம்பெனியிலிருந்து நஷ்ட ஈடு வழங்கப்பட்டதா ? இந்தமாதிரி இனி நடை பெருமல் இருக்கச் சிறப்பு ஏற்பாடு என்ன செய்யப்பட்டுள்ளது என்று அறிவிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : Electrical spark in the tube plate fitting— அதன் காரணமாக தீ விபத்து ஏற்பட்டதாகத் தகவல் கொடுக்கப் பட்டிருக்கிறது.

The Director of Handlooms and Textiles has since reported that the Fire and General Insurance Society has sanctioned a sum of Rs. 86,065 towards the settlement of the claim preferred by the Tiruchendur Co-operative Spinning Mills.

நமக்கு அதிக நஷ்டம் எதுவும் இல்லை.